# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

## *2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 08 ஆம் திகதிய*
## *பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2012. 06. 11 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


# அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தம்

*(தனியார் உறுப்பினர் சட்டமூலம்)*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

கொழும்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ விஜயதாஸ ராஜபக்ஷ அவர்களால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 3.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

முன்னுரை.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு மூலம் பௌத்த சாசனத்தை பாதுகாத்து பேணுவதற்கும் மற்றும் சகல மதங்களுக்கும் உள்ள உரிமைகள் பாதுகாத்து உறுதி செய்துள்ளபடியால் :

தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்தை உருவாக்கும் நோக்கத்துடன் மதங்களின் கௌரவத்தையும் மற்றும் புனிதத் துவத்தை எடுத்துச் செல்வதற்காகவும், பாதுகாப்பதற்காகவும் அரசியலமைப்பின் ஏற்பாடுகளைத் திருத்தும் தற்கால தேவை யொன்று ஏற்பட்டுள்ளபடியால் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப்பெயர்.

**1**. இச்சட்டம், அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தம் என குறிப்பிடப்படும்.

அரசியலமைப்பின் 91 ஆவது உறுப்புரையைத் திருத்துதல்.

**2**. அரசியலமைப்பின் 91 ஆவது உறுப்புரைக்கு கீழ்க்காணும் சேர்ப்பனவு மூலம் திருத்தப்படுகின்றது :-

"91 (1) (ஈ) (xiii) எந்தவொரு மதத்தினதும் மதகுருவொருவராக இருந்தால்."

திருத்தம் நடைமுறைக்கு வரும் திகதி.

**3**. ஏழாவது பாராளுமன்றத்தின் கால எல்லை முடிவுற்ற பின் அல்லது கலைக்கப்பட்டவுடன் இத்திருத்தங்கள் நடைமுறைக்கு வரும்.

ஒவ்வாமையின் விடயத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**4**. இச்சட்டத்தின் சிங்கள மற்றும் தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்